சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **158 / 2023**

பெயர்: தனலட்சுமி ம.சா. 1 தேதி 10.03.2026

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் எனது பேரன் விக்னேஷ் என்பவர் கொடுத்தார். விபத்து சம்மந்தமாக காவல் துறையினர் விசாரித்தார்களா என்றால் தெரியவில்லை. மேற்படி விபத்து நடந்த சாலையானது அகலமான ரோடு என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை யார் ஓட்டிச்சென்றார் என்றால் எனது பேரன் ஓட்டி சென்றார். மேற்படி இருசக்கர வாகனத்தில் நான் பின் இருக்கையில் அமர்ந்து சென்றேன். நானும், எனது பேரனும் பேசிக்கொண்டே சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு எனது பேரன் சாலையின் மையபகுதிக்கு வந்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டி சாலை விதிகளை பின்பற்றி வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் யார் சேர்த்தார்கள் என்றால் எனது பேரன் சேர்த்தார். விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் கரூர் காந்திகிராமம் அரசு மருத்துவனையிலும், கரூர் ராஜு ஆர்தோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மேற்படி நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என்னால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு பின்னர் முழுமையாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தின் போது முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டிக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் முதல் எதிர்மனுதாரர் தான் வழங்கவேண்டும் இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 17:20:17 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.